மாற்றுத் திறனாளிகளுக்கானமாநில ஆணையரக இணை இயக்குநர்(பொ)அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள், சென்னை

முன்னிலை: திரு.கோ.இரவீந்திரநாத் சிங், எம்.ஏ.,பி.எல்.,டி.எல்.எல்.,டி.பிஏ.,

செ.மு.ந.க.எண்2379/நிர்.2/2016 நாள்: 24.05.2016.

பொருள்: பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம் – சென்னை –தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4–(2013–2014) – தேர்வு செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பணிவரன் முறை ஆணை வழங்குதல் –தொடர்பாக .

பார்வை : 1. சமூக நல இயக்குநர் அவர்களின் செ. மு. ந. க .எண்: 4715/நிர்–4(3)/2014 நாள் : 05.09.2014.

2.இவ்வாணையரக செ.மு.க.எண்.4681/நிர்–2/2014, நாள்.13.10.2014.

------

ஆணை :

பார்வையில் காணும் சமூக நல இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4ல் அடங்கிய பணிகளுக்கு 2013–2014 ஆம் ஆண்டு தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்டு பார்வை 2ல் காணும் இவ்வாணையரக செயல்முறை ஆணையின்படி கடலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் 20.10.2014 அன்று முற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்த திருமதி.க.அம்சவள்ளி, என்பாரது பணியினை, தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பொது விதி 23(a)1–ன் படி தட்டச்சர் பதவியில் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 20.10.2014 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகின்றது.

மேலும், திருமதி.க.அம்சவள்ளி, தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இரண்டாண்டு பணிக்காலத்திற்கு தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பணியில் தட்டச்சர் பதவியில் தகுதி காண் பருவத்தில் இருப்பார் எனவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இத்துடன் அன்னாருடைய பணிப்பதிவேடு இணைத்து அனுப்பப்படுகிறது. உரிய பதிவுகள் மேற்கொண்டு உடன் இவ்வாணையரகத்திற்கு அறிக்கை சமர்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) கோ.இரவீந்திரநாத் சிங்,
மாற்றுத்திறனாளிகளுக்கான இணை இயக்குநர்(பொ)

பெறுநர்

திருமதி.க.அம்சவள்ளி, (தட்டச்சர்)
மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
கடலூர் மாவட்டம்
(மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மூலமாக)

நகல்:

1. மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்,
   கடலூர் மாவட்டம்.
2. சமூக நல இயக்குநர்,
   சமூக நல இயக்குநரகம்,கிண்டி, சென்னை–32.
3. இருப்புக் கோப்பு / உதிரி. //ஆணைப்படி//

துணை இயக்குநர்/
உதவி இயக்குநர்(நிர்வாகம்)(பொ)

1/4

30/05/2016